# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

## S.C. 107/2018

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 07-ம் நாள் வியாழக்கிழமை PW1-இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW1 Examined as PW 1

| | | |
|---|---|---|
| Date | : | 07.12.2023 |
| Name | : | நாகராஜன் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | |

Accused Produced on P.T.warrant

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

நான் தற்போது மயிலாடுதுறையில் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில்பணிபுரிகிறேன்.ஆஜர்எதிரியை தெரியும். 27.6.2016 தேதி சீர்காழி புது பஸ்ஸ்டாண்டில் நானும் தனிப்பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளர் ஆனந்த் என்பவரும் ரோந்து பணிக்காக இரவு 8.00 மணிக்கு சென்றபோது பெட்டிக்கடையில் கூட்டமாக இருந்தது. பெட்டிக்கடை காரரும் ஆஜர்எதிரி வாக்குவாதம்செய்துகொண்டிருந்தார்கள். சறிப்பு உதவி ஆய்வாளர் ஆஜர்எதிரியிடம்கேட்டதற்கு நான் சும்மதான் வந்தேன் என்று கூறி வாக்குவாதம் ஏற்பட சிறப்பு உதவி ஆய்வாளர் எதிரியை பிடிக்க முயன்றபோது கீழே விழந்து இருசக்கரம்வாகனம் விழுந்து இடதுதாளில் காயம் ஏற்பட்டது. அதன்பிறகு சீர்காழிகாவல்நிலையம் வந்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்அந்த புகார்

நான்கொடுத்ததுதான்.**அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.**

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில்காயம்பட்டவர் நபர் காவல்துறையை சேர்ந்தவர் என்றால் சரிதான்.அப்போது என்னுடன் சீர்காழி காவல்நிலைத்தில் பணிபுரந்தார்என்றால்சரிதான் சம்பதசதில்சிறப்பு உதவி ஆய்வாளருக்குதான்காயம் ஏற்பட்டது என்றால்சரிதான்.,காயம்பட்ட நபர்ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் அவருக்கு உடம்பு முடியாமல் மருத்துவமனையில் இருந்ததால்நான் புகார் கொடுத்தேன். காயம்பட்ட அதிகாரிடம்புகார்பெற்றாரா என்பது தெரியவில்லை. சண்டை நடந்ததாக கூறப்படும்பெட்டிக்கடை காரர்பெயர் தெரியவில்லை அவரிடமிருந்து புகார் வாங்கவில்லை என்றால்சரிதான். காயம்பட்டவருக்கு வெட்டு காயம் எதுவும்இல்லை என்றால்சரிதான். சம்பவம் நடந்தபோது எதிரி வண்டியில்அமர்ந்திருக்கவில்லை, கீழே நின்றுக்கொண்டிருந்தார். சாட்சி மீண்டும் வண்டி இயங்கிக்கொண்டிருந்ததாகவும் எதிரி வண்டியில் அமர்ந்திருந்ததாகவும் கூறுகிறார். சம்பவம் அன்றே இரவு என்னை விசாரணை அதிகாரி 26.7.2014 ல் விசாரணை செய்தார் , எதிரிக்கும் இந்த வழக்கிற்கும்சம்மந்தம்இல்லை என்றாலும் எதிரிமீது வேண்டுமென்றே பொய்வழக்கபோட்டும் வழக்கில்காயம் பட்டவர் சகஅதிகாரி என்பதால்பொய்யாக புகார் கொடுத்து அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.